# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்

*(2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2008, பெப்புருவரி மாதம் 29 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

**2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

[2008 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 29 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ.ஓ. 7/2008

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1**. இச்சட்டம், 2008 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்காக பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :- 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும் :

ஆயினும், இச்சட்டத்தினதும் இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களினதும் முரண்பாடு எது எப்படியிருப்பினும், எவையேனும் பொருட்கள் அல்லது பண்டங்களின் ஏற்றுமதியில் இருந்து 2008, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் எழுகின்ற மொத்த விற்பனவு வரவு தொடர்பில் விதிக்கப்படற்பாலதான பொருளாதாரச் சேவை விதிப்பனவுகளின் வீதம் 0.25 சதவீதத்தை விஞ்சுதல் ஆகாது.".

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும்." என்னும் சொற்களுக்காக பின்வரும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது – முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும் :

ஆயினும், 2006 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் இயைபான வரிமதிப்பீட்டாண்டுக்கு செலுத்தப்

2-PL 002796 -1,400 (2008/02)

படற்பாலதான இயைபான வருமானவரியிலிருந்து இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க அதனது கழிப்பனவுகளின் பின்னர் 2004 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் I இன் ஏற்பாடுகளுக்கு இணங்க செலுத்தப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் ஏதேனும் தொகை 2006, மாச்சு 31 ஆந் தேதியன்று உள்ளவாறாக மீதி மிச்சமிருக்குமிடத்து,-

(அ) அத்தகைய தொகை 2005 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு செலுத்தப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் ஏதேனும் பாகத்தை உள்ளடக்கியிருப்பின், அத்தகைய பாகம் 2006 ஆம் ஆண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைந்த அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடன் அடுத்துறும் வரிமதிப்பீட்டின் மூன்று ஆண்டுகளினுள் வருகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் பங்கிடப்படலாம்.

(ஆ) அத்தகைய தொகை 2006 ஆம் ஆண்டு மாச்சு 31 ஆந் தேதியன்று முடிவடைந்த வரிமதிப்பீட்டாண்டுக்கு செலுத்தப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் ஏதேனும் பாகத்தை உள்ளடக்கியிருப்பின், அத்தகைய பாகம் 2006 ஆம் ஆண்டின் மாச்சு 31 ஆம் தேதியன்று முடிவடைந்த அவ்வரிமதிப்பீட்டாண்டினை உடன் அடுத்துறும் வரிமதிப்பீட்டின் நான்கு ஆண்டுகளினுள் வருகின்ற வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் பங்கிடப்படலாம்,

என்பதுடன் அவ்வாறு பங்கிடப்பட்ட பொருளாதாரச் சேவை விதிப்பனவின் பாகங்கள் அத்தகைய வரிமதிப்பீட்டாண்டு ஒவ்வொன்றுக்கும் அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையினால் செலுத்தப்படற்பாலதான வருமானவரியிலிருந்து அவ்வாறு கழிக்கப்பட முடியுமான அவ்வளவிற்குக் கழிக்கப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்திற்கான உட்பிரிவுகளைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான அட்டவணை இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) பின்வரும் விடயங்களை அட்டவணையின் 4 ஆம், 5 ஆம் விடயங்களிற்கு இடுவதன்மூலமும் :-

4. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றினது அத்தகைய பாகம் –

(i) அவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிலுள்ள 28ஆம் விடயத்தைத் தவிர அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலவை ;

0.5 சதவீதம்

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொண்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சியால் கொண்டுநடாத்தப்படும் ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத்தொழில் என்பவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவொரு வீதத்திற்கு சமமான வீதத்தில் எக்காலப் பகுதிக்காக வரிசெலுத்தற்பாலனவாகவுள்ளனவோ அக்காலப்பகுதியின் போதான இயைபான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள அத்தகைய தொழில்முயற்சி.

0.5 சதவீதம்

4அ. ஏதேனும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதி அன்று அல்லது அதன் பின்னர் எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றினது அத்தகைய பாகம் -

(i) அவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிலுள்ள 24 ஆம், 28 ஆம் விடயத்தைத் தவிர அவ்வட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வீதத்தில் வருமானவரி விதிக்கப்படற்பாலவை ;

0.5 சதவீதம்

(ii) 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட் டுச்சபைச் சட்டத்தின்கீழ் உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டுள்ள ஏதேனும் தொழில்முயற்சியினால் கொண்டுநடாத்தப்படும் வியாபாரம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் என்பவற்றிலிருந்தான இலாபங்களும் வருமானமும் 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான ஐந்தாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவொரு வீதத்திற்கு சமமானவொரு வீதத்தில் எக்காலப்பகுதிக்காக வரிசெலுத்தற்பாலனவாகவுள்ளனவோ அக்காலப்பகுதியின் போதான இயைபான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள அத்தகைய தொழில்முயற்சி.
0.5 சதவீதம்

5. விற்பனையாளரினால் உற்பத்தி செய்யப்படாத மோட்டார் வாகனங்களின் அல்லது மதுபானத்தின் மொத்த விற்பனையை (விநியோகிப்பாளர் தவிர) அல்லது சில்லறை விற்பனையைக் கையாளுகின்ற ஏதேனும் வியாபாரத்திலிருந்தான அல்லது தொழிலிருந்தான மொத்த விற்பனை வரவைக் கொண்டுள்ள இயைபான மொத்த விற்பனை வரவின் பின்வருவனவற்றிலிருந்து அத்தகைய பாகம் :-

(i) 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னராக எழுகின்றவைக்கு
0.5 சதவீதம்

(ii) 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்றும் அதன் பின்னரும் எழுகின்றவைக்கு
1.0 சதவீதம்"

2. பின்வரும் விடயங்களை அட்டவணையின் 11ஆம் விடயத்திற்கு பதிலிடுவதன் மூலமும் :-

"11. பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னராக எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம் -

(i) *ஆடைகளை ஏற்றுமதி செய்வதிலிருந்தான அல்லது ஆடை ஏற்றுமதியாளர்களினால் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக ஆடைகளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்தப்படுவதற்கென அத்தகைய ஆட்களுக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புடவைகளை வழங்குவதிலிருந்தான மொத்த விற்பனை வரவு.*

*0.1 சதவீதம்*

(ii) *முதலீட்டுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபார மனையொன்று ஆடைகளை ஏற்றுமதிசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள அளவுக்கு அத்தகைய வியாபார மனையின் மொத்த விற்பனை வரவு.*

*0.1 சதவீதம்*

*11அ.* *பின்வருவனவற்றைக் கொண்டுள்ளவாறான 2008 ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் எழுகின்ற இயைபான மொத்த விற்பனை வரவின் அத்தகைய பாகம்–*

(i) *(அ) ஆடைகளின் ஏற்றுமதியில் ; அல்லது*

*(ஆ) ஏற்றுமதி செய்வதற்கென ஆடைகளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு உள்ளூரில் உற் பத்தி செய்யப்பட்ட ஆடைகளை வழங்குவதில் ;*

*(இ) ஏற்றுமதியாளரினால் ஏற்றுமதி செய்வதற்காக ஆடைகளை உற்பத்தி செய்வதில் பயன்படுத்துவதற்கென ஆடைகளின் எவரேனும் ஏற்றுமதியாளருக்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புடவைகளை வழங்குவதில்.*

*இருந்தான மொத்த விற்பனை வரவு.*

(ii) முதலீட்டுச்சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமனையொன்று ஆடைகளை ஏற்றுமதிசெய்யும் தொழிலில் ஈடுபட்டுள்ள அளவுக்கு அத்தகைய வியாபாரமனையின் மொத்த விற்பனை வரவு. *0.1 சதவீதம்*

*ஒவ்வாமையின் போது சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**5**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா *1,387 :* (வெளிநாடு) ரூபா *1,849 :* ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. *163*, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்